பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை (19.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 294

# பொத்துவில் காட்டுப் பகுதியில் 11 முஸ்லிம்கள் வெட்டிக்கொலை!

## கைகள், கண்கள் கட்டிய நிலையில் சடலங்கள் அங்கு பதற்றம்! ஹக்கீம், அலவி உடன் விரைவு

கல்முனை,செப்ரெம்பர் 19

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பகுதியில் - காட்டுப் பிரசேத்தில் - கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் முஸ்லிம்கள் 11 பேரின் சடலங்கள் நேற்றுக்காலை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

பொத்துவிலில் இருந்து சுமார் ஒன்பது கிலோமீற்றர் தொலைவில் - இரத்தல்வாவிப் பகுதியில் - வெட்டுக்காயங்களுடன் இந்தச் சடலங்கள் காணப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

இரத்தல் வாவியின் திருத்தவேலைகளில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்களான முஸ்லிம்களே அடையாளந்தெரியாத நபர்களால் இவ்வாறு கோரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

சடலங்களுக்கு மத்தியில் குற்றுயிருடன் காணப்பட்ட ஒருவர் மீட்கப்பட்டு அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இந்தச் சம்பவத்தில் வேறு இரண்டு தொழிலாளர்கள் காணாமற்போயிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தல் வாவிப் பகுதிக்கு ஞாயிறன்று தொழிலுக்குச் சென்ற இந்த முஸ்லிம் தொழிலாளர்கள் அன்று மாலை வழமை போன்று தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையிலேயே அவர்களது சடலங்கள் நேற்றுக்காலை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

கொலையுண்டவர்களின் கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன. பத்து சடலங்கள் வாவிக்கரையோரத்திலும், ஒரு சடலம் சற்றுத் தொலைவில் பற்றை மறை

(08 ஆம் பக்கம் பார்க்க)



## அம்பாறையில் இன்று ஹர்த்தால் விடுதலைப் புலிகள் அழைப்பு

கிளிநொச்சி,செப்.19

பொத்துவில் காட்டுப் பகுதியில் முஸ்லிம்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பகுதிகளில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# விசேட அதிரடிப்படையினர்மீது முஸ்லிம்கள் ஆத்திரம் முகாம் பொறுப்பதிகாரியை வெளியேற்றக் கோரிக்கை

## பொலிஸ்மா அதிபர் உட்பட பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில் இருந்து பொத்துவிலுக்கு விரைவு

கொழும்பு, செப்.19

பொத்துவிலில் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் பதினொருபேர் கோரமாகக் கொலை செய்யப்பட்டிருப்பதால் ஆத்திரமடைந்துள்ள பிரதேச முஸ்லிம்கள், அப்பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் ஒன்றின் பொறுப்பதிகாரியை உடனடியாக வெளியேற்றுமாறு கோரியிருக்கின்றனர்.

பலநூற்றுக் கணக்கான மக்கள் நேற்றுப் பகல் பொத்துவில் பெரிய பள்ளிவாசலில் திரண்டு அதிரடிப்படையினருக்கு எதிராகத் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அங்குள்ள அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஒருவருக்கும் பொதுமக்களுக்கும் இடையே உறவுநிலை பாதிக்கப்பட்டிருந்தது என்றும் தகவல் வெளியாகி உள்ளது. அத்துடன் மையவாடி தொடர்பாக அப்பகுதியில் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது.

படுகொலைகள் நடந்த இரத்தல்வாவிப் பகுதிக்கு அருகே விசேட அதிரடிப்படை முகாம்கள் பல அமைந்துள்ளன. என்று கூறப்படுகிறது. அதிரடிப்படையினரின் அனுமதி இன்றி - அவர்களுக்குத் தெரியாமல் - எவ

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் இரு தரப்புகளும் மாறி மாறி பரஸ்பரம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 19

பொத்துவில் காட்டில் பதினொரு முஸ்லிம்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு அரசு மீது புலிகள் இயக்கமும், புலிகள் இயக்கம் மீது அரசும் மாறி மாறிக் குற்றம் சுமத்தியுள்ளன.

மேற்படி ஏரியின் தண்ணீர்க் கதவுகளைத் திறந்து விடச் சென்ற முஸ்லிம்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்" என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளாலேயே படுகொலை செய்யப்பட்டனர் எனச் சந்தேகிக்கப்படுகின்றது என்று இலங்கை அரச ஊடகங்கள் தெரிவித்தன.

அதேசமயம், இந்தப் படுகொலைகளை வன்மையாகக் கண்டித்துள்ள புலிகள், இதற்கான குற்றச்சாட்டைத் தங்கள் மீது சுமத்துவதையும் அடியோடு நிராகரித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகப் புலிகளின் சமாதானச் செயலகம் நேற்று அறிக்கை ஒன்றை

(08 ஆம் பக்கம் பார்க்க)

### கிரனேட் வீச்சு

கரவெட்டி,செப்.19

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்திக்கு அண்மையில் உள்ள இராணுவ முகாம்மீது நேற்றுக்காலை 7 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. எனினும், அது வெடிக்கவில்லை.

மேற்படி கிரனேட் வீச்சையடுத்து அந்த வழியே சென்ற பொதுமக்கள், சீருடையினரின் நெருக்கடிக்கு இலக்கானதாகக் கூறப்பட்டது. (70)

## கொடூரக் கொலைகள் என்று முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்!

பொத்துவில் பிரதேச முஸ்லிம் மக்கள் 11 பேர் இரத்தல்குளம் காட்டுப் பகுதியில் வெட்டியும், குத்தியும் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் அளித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பொத்துவிலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் குறித்துக் கண்டனம் தெரிவித்துப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"யுத்தமொன்றில் பங்கு பற்றாமல் சமாதானத்தைப் பெரிதும் விரும்பி வாழும் அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் இவ்வாறான செயற்பாடு காரமாக எதிர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர் மக்களுடன் அதிரடிப்படையினருக்கு முரண்பாடு இருந்தது என்கிறார் ஹக்கீம்

பொத்துவில், செப்.19

பொத்துவிலில் அப்பாவி முஸ்லிம் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட பகுதியில் விசேட அதிரடிப்படையினர் பொதுமக்களுடன் ஏற்கனவே பல விடயங்களில் முரண்பட்டுள்ளனர். மையவாடி சம்பந்தமான ஒரு பிரச்சினையிலும் அதிரடிப்படையினர் முஸ்லிம்களோடு மிக மோசமாக நடந்துகொண்டனர்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்.

பொத்துவிலில் படுகொலை இடம்பெற்ற பகுதிக்கு நேற்று அவசர விஜயம் மேற்கொண்ட பிறகு பி.பி.ஸி. தமிழோசைக்கு ஹக்கீம் செவ்வி அளித்தார். அதில் அவர் கூறியதாவது:-

இக்கொலைகளுடன் யார் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற விவரம் தொடர்பாக மக்கள் மத்தியில் மிகப் பதற்றமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இச்சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் காரணமாக இருக்க முடியாது - விசேட

(08 ஆம் பக்கம் பார்க்க)

### 'லிபர் பூல்' இன்றே புறப்படும்

திருகோணமலை,செப்.19

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நேற்றுப் புறப்படவிருந்த 'லிபர் பூல்' கப்பல் இன்றே புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாயிரத்து 500 மெற்றிக்தொன் மா மற்றம் 500 மெற்றிக் தொன் சீனியுடன் 'லிபர் பூல்' கப் பல் நேற்றுப் புறப்படவிருந்தது.

இந்தக் கப்பலில் தொடர்பாடலில் ஏ

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




உண்ணாநோன்பு இருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 19ஆவது நினைவுதினம் யாழ். மாவட்டத்தில் பொது இடம் ஒன்றில் இடம்பெற்றது. நிகழ்வில் திலீபனின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றுவதையும் மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

# முகமாலையில் சேதமடைந்த லொறிகளை ஆவணங்கள் சமர்ப்பித்து பெறுவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம்,செப்.19

கடந்தமாதம் 10ஆம் திகதி முகமாலையில் நிறுத்தப்பட்ட வாகனங்களில் ஒரு தொகுதி வாகனங்கள் கொடிகாமத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

கடந்தமாதம் 10ஆம் திகதி முகமாலைச் சோதனை நிலையத்தில் நிறுத்தப்பட்ட 60 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் அங்கு இடம்பெற்றதாக்குதல் சம்பவங்களினால் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்த வாகனங்களில் ஒருதொகுதி வாகனங்கள் கொடிகாமம் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

அந்த வாகனங்களின் உரிமையாளர்கள், கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்து வாகனங்களைப் பெற முயற்சி மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனங்களில் இருந்த சிமெந்து, எஸ்லேன், உணவுப் பொருள்கள் ஆகியன எரிந்து நாசமாகியுள்ளன என்றும் -

வாகனங்களும் எரிந்து பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன என்றும் - வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

# திடீரெனக்கேட்ட வெடிச்சத்தத்தால் பொலிகண்டியில் பதற்றம்

கரவெட்டி,செப்.19

வடமராட்சி பொலிகண்டி பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் திடீரெனக்கேட்ட வெடிச்சத்தங்களால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

பொலிகண்டி பிரதான வீதியில் உள்ள இராணுவச் சோதனைச்சாவடிப் பகுதியிலேயே இந்தத் துப்பாக்கிவேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் -

இதையடுத்து பதற்றமடைந்த மக்கள் பாதுகாப்புத்தேடி ஓடினர் என்றும் - செய்திகள் தெரிவித்தன. சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டதையடுத்து, துப்பாக்கிவேட்டுக்களால் ஏற்பட்ட சேதவிவரங்களை அறியமுடியவில்லை. 70)

# இன்றும் மட்டுப்படுத்திய பஸ்சேவை போக்குவரத்துச் சபையினர் தெரிவிப்பு

## தினமும் மாலை 4 மணிக்கு கடைசிநேர பஸ்சேவை என்றும் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.19

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து மாலை 4 மணிக்கு சகல பாதைகளுக்கும் கடைசி பஸ் சேவை இடம்பெறும் என்று வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரி தெரிவித்தார்.

போதியளவு டீசல் வழங்கப்படாத காரணத்தால் சேவைகளை முழுமையாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் -

நேற்றுமாலை டீசல் வழங்கப்படும் என உறுதி வழங்கப்பட்டபோதும், டீசல் கிடைக்காததால் இன்றும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையையே நடத்தவேண்டியுள்ளது என்றும்-

போதியளவு டீசல் கிடைக்கும்பட்சத்தில் சேவையை முழுமையாக ஆரம்பிக்கமுடியும் என்றும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(1)

# படுகொலைகள்

யாழ்ப்பாணம், செப். 19

குடாநாட்டில் நேற்றும் நேற்றுமுன்தினமும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் நால்வர் உயிரிழந்தனர்.

**கரவெட்டியில்**

கரவெட்டி உச்சி அம்மன் கோயிலடியில், இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராஜா சாந்தகுமார் (வயது-23) என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் மோட்டார் சைக்கிளில் வீட்டிலிருந்து சென்றபோது இவரது வீட்டுக்குச் சமீபமாக வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோண்டாவிலில்**

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவும் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த சண்முகநாதன் சுரேஷ் (வயது-28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இவர் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இருபாலையில்**

இருபாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் பலசரக்குக் கடை உரிமையாளர் ஒருவர் இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இருபாலை கிழக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான முருகையா குலராஜ் (வயது - 36) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். கடையில் இருந்த சமயம் இனந்தெரியாதவர்கள் கடைக்குள்வைத்து இவரைச் சுட்டு விட்டுச் சென்றுவிட்டனர்.

**அளவெட்டியில்**

ஊரடங்கு அமுலில் இருந்தவேளை அளவெட்டிப் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அளவெட்டி வடக்கு தேரிட்டிபகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி தயாளன் (வயது - 36) என்பவரே சுட்டுக்கொல்லபட்டார்.(த-68-190-203-70)

# அச்சுறுத்தப்படவில்லை என்று தகவல்

யாழ்ப்பாணம்,செப்.19

யாழ். நகரப் பகுதியில் உள்ள மருந்தகங்களில் ஒன்றில் அண்மையில் ஊரடங்கு அமுலில் இருந்தவேளையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தின்போது மருந்துப் பொருள்கள் எதுவும் களவாடப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

மருந்தகத்தின் உரிமையாளர் எவராலும் அச்சுறுத்தப்படவில்லை என்றும், பணமும் கையடக்கத் தொலைபேசிகளுமே திருட்டுப் போயின என்றும் மருந்தக நிர்வாகத்தினர் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

'மருந்தகம் உடைக்கப்பட்டு பணம், பொருள் திருட்டு' என்ற தலைப்பில் உதயனில் நேற்று வெளியான செய்தி குறித்து மேற்கண்டவாறு பிரஸ்தாபிக்கப்பட்டது.

# இள்வாலை, அளவெட்டி பகுதிகள் நேற்று சுற்றிவளைத்துத் தேடுதல்

இளவாலை, அளவெட்டி மற்றும் விளான் பகுதிகள் நேற்று பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்களுக்கு உட்படுத்தப்பட்டன.

எனினும் இந்தத் தேடுதலின் போது எவரும் கைது செய்யப்பட்ட தாகத் தகவல் இல்லை. மேற்படி சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு வசதியாக வலி.மேற்குப் பிரதேசத்தில் நேற்று நண்பகல் 12 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**ஊரடங்கு அமுலான பகுதி பற்றி முரண்பாடு**

நேற்றுக் காலை 6.20 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவையினர் 513 ஆவது படையணியின் கட்டளைக்கு உட்பட்ட வலி.மேற்குப் பிரதேசத்தில் நண்பகல் 12 மணிக்குப் பின்னரே ஊரடங்கு தளர்த்தப்படும் என அறிவித்தனர்.

இதனால் 513 ஆவது படையணியின் கட்டளைக்குட்பட்ட வலி. வடக்கு, வலி. தெற்கு, வலி.தென்மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்கள் இந்த ஊரடங்கு தமது பகுதியிலும் அமுலில் உள்ளதா என்று அறிய முடியாது திண்டாடினர். இதேவேளை, மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் எவரும் நேற்றைய தினம் வீதிகளில் நடமாடப் படையினரால் அனுமதிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் தமது கடமைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் தெற்கு ஆகிய பகுதிகளில் அரச அலுவலகங்கள் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் தனியார் வர்த்தக நிலையங்கள் என்பவையும் கூட நேற்று நண்பகல் வரையிலும் திறக்க அனுமதிக்கப்படவில்லை என்று ஒரு தகவல் தெரிவித்தது. (203-68)

# தமிழகத்தில் தமிழர் - முஸ்லிம் மோதலை உருவாக்க அங்குள்ள இலங்கைத் துணைத் தூதர் 'சதி'யாம்!

## 'நக்கீரன்' சஞ்சிகையில் பரபரப்பு தகவல்

சென்னை, செப்.

தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு, முஸ்லிம்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தும் வகையில் அங்குள்ள இலங்கைத் துணைத் தூதர் செயற்பட்டு வருவதாக தமிழக சஞ்சிகையான 'நக்கீரன்' ஏடு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக 'நக்கீரன்' ஏடு வெளியிட்டிருக்கும் செய்தி வரு மாறு:-

இலங்கைக்கு வந்த இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் "இப் போதுள்ள சூழலை அதிபர் ராஜ பக்ஷ பயன்படுத்தி அமைதிப் பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும்" என அதிபரிடமே நேரில வலியுறுத்தியிருக்கிறார்.

பிரேசில் பயணத்தின்போது விமானத்திலேயே பேட்டியளித்த இந் தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசினார்.

ஈழ விவகாரத்தில் இந்தியா காட்டி வரும் அக்கறையை கொழும்பு அரசியல் வட்டாரம் உன்னிப்பாக கவனித்து எதிர்வினை நிகழ்த்தி வருகிறது.

"எங்கள் நாட்டின் உள்விவகாரங்களில் அநாவசியமாகத் தலையிடுகிறார்" என்று இலங்கைக்கான இந்திய தூதுவர் நிருபமா ராவ மீது இலங்கை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா அண்மையில் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். அதே நேரத்தில், சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதர் ஹம் சாவுக்கு ராஜபக்ஷ அரசு ஸ்பெஷல் 'அசைன்மெண்ட்' கொடுத்தி ருக்கிறது.

"இதை இந்திய உளவுத்துறை யினர் எந்தளவு மோப்பம் பிடித்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை" என்றார் கொழும்பில நம்மிடம் பேசிய அதிபர் அலுவலக அதிகாரி ஒருவர்.

சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதர் ஹம்சா, ஏற்கனவே தனது அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டு, ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழக சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விமர்சித்தவர்.

இப்போது அவர், தமிழகத்திலுள்ள முஸ்லிம் மதரஸாக்கள், உலமாக்களை ஒருங்கிணைக்கும் அசைன்மெண்ட்டில் தீவிரமாக இருக்கிறார் என்பதே கொழும்பு அதிகாரி நம்மிடம் தெரிவித்த முக்கிய தகவல்.

"உலமாக்கள் ஒருங்கிணைந்து விரைவில ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தவிருக்கிறார்கள். அந்த சந்திப்பில் வெளிப்படுத்தப்படும் தகவல்கள் ஈழ விவகாரத்தில் தமிழர்களுக்கு ஆதரவாக உள்ள அமைப்புகளுக்கு தர்மசங் கடத்தை வெளிப் படுத்தக் கூடியதாக இருக்கும்" என்றது கொழும்பு வட்டாரம்.

இலங்கைத் தலைநகரில் உள்ள தமிழர் அமைப்பினருக்கும் ஹம்சா மேற்கொண்டிருக்கும் "அசைன் மெண்ட்" பற்றித் தெரிந்திருக்கிறது. அவர்களிடம் பேசினோம்.

"இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை பகுதிகளில் முஸ்லிம் ஜிகாத் அமைப்பு இரகசியமாக செயற்பட்டு வருகிறது. இதனை உருவாக்கி, நிதியுதவி செய்துவருவது பாகிஸ்தான். இலங் கையில் பயிற்சி எடுத்து, தென்னிந்தியாவுக்குள் இவர்கள் நுழைய வேண்டும் என்பதுதான் பாகிஸ்தானின் திட்டம். அதேநேரத்தில், இலங்கை அரசோ, இந்த ஜிகாத் அமைப்பை விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் எதிராகப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் குறிக்கோளுடன் இலங்கையில் ஜிகாத் அமைப்புகள் வளர்த்துவிடப்பட்டு வருகின்றன" என்றவர்கள், அண்மையில் மூதூர் பகுதியில் இலங்கை இராணுவத்துக்கும் புலிகளுக்கும் நடந்த சண்டையில் இராணுவத்துக்கு ஆதரவாக ஜிகாத அமைப்பினர் களமிறங்கியதையும் சுட்டிக்காட்டினர்.

"மூதூர் சண்டையில் முஸ்லிம்கள் தரப்பில் இறந்து போனவர்கள் ஜிகாத் அமைப்பினர்தான். இத னால் புலிகள் மீது பாகிஸ்தானின் கோபம் அதிகரித்துள்ளது. அதிபர் ராஜபக்ஷவும் இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய தூதுவரும் சமீபத்தில் சந்தித்து நீண்டநேரம் விவாதித்துள்ளனர்.

"அந்த சந்திப்பின்போதுதான் ஹம்சாவுக்கு தரப்பட்டுள்ள 'அசைன்மெண்ட்' இறுதி வடிவம் பெற்றிருக்கிறது" என்கிறது அதிபர் அலுவலக வட்டாரமே!

"இலங்கையில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதற்கு தமிழக முஸ் லிம்களிடமிருந்து பெரிய அளவில் கண்டனங்களையும், கருத்துக்களையும் வெளிக்கொண்டு வர வேண்டும். தமிழர்கள் வேறு, முஸ் லிம்கள் வேறு என்ற எண்ணத்தை தமிழகத்தில் உருவாக்க வேண்டும். அதற்கேற்றபடி தமிழ்நாட்டில் கல் எறிய வேண்டும்.

தமிழக முஸ்லிம்களின் எதிர்ப்புக்குரல் ஓங்கும்போது, அங்குள்ள ஈழ ஆதரவு அமைப்புகளுக்கு சங்கடம் ஏற்படும். அவர்களின் குரல் மெல்ல தணியும். தமிழகத்தில் ஈழ ஆதரவுக்குரல் குறைந்தால், இலங்கைப் பிரச்சினையில் இந் திய அரசின் தலையீடும் நிர்ப்பந் தமும் குறைந்துவிடும்" என்பது தான் அதிபர் ராஜபக்ஷ - பாகிஸ் தான் தூதுவர் சந்திப்பின் சாராம்சம்.

இதுபற்றி சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதுவர் ஹம் சாவிடம் தெரிவிக்கப்பட, "அசைன் மெண்ட்"டை உடனடியாக செயற்படுத்தும் முடிவுடன் களமிறங்கி, உலமாக்களை அவர் சந்தித்து வருகிறார். அவர்களை ஒருங்கி ணைத்து விரைவில் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தும்படி வலியுறுத்துகிறார். அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள அசைன் மெண்ட்படி பத்திரிகையாளர் சந்திப்பு நடக்கும்போது, "மூதூரில் நடந்த சண்டையில் முஸ்லிம்களை கொன்றது புலிகள்தான். இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். புலிகள் பிரதேசத்தில் முஸ்லிம்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. இதில் இந்திய அரசு தலையிட வேண்டும்" என்ற 'வாய்ஸ்' உலமாக்களிடமிருந்தும் ஒலிக்கச் செய்யவேண்டும் என்பதில் ஹம்சா கவனமாக இருக்கிறார்.

தமிழகத்தில் 'தமிழர்- முஸ்லிம்' என்ற புதிய மோதலை உருவாக்க வேண்டும் என்கிற இலங்கை அரசின் திட்டத்துக்கான முதல் கட்டம் விரைவில் வெளிப்படும் என்கிறது கொழும்பு வட்டாரம்,

"இந்த விடயத்தில் தமிழகத்தில் உள்ள முஸ்லிம் அமைப்புக்களின் நிலைதான் மிகவும் கவனத்திற்குரியது. அரசியல் சார்ந்த தமிழக முஸ்லிம் அமைப்புக்கள் ஈழ விடயத்தில் தீவிர கவனம் செலுத்தாவிட்டாலும், அந்த அமைப்புக்கள் தமிழர்களுக்கு எதிராக வெளிப்படையாகத் தங்கள் கருத்துககளை வெளியிட்டதில்லை. ஈழத்தமிழர் களை ஆதரிக்கும் தமிழக அரசியல் கட்சிகளுடன் இணக்கமாகவே இருக்கிறார்கள். உலமாக்கள் மூலம் தமிழக முஸ்லிம் அமைப்புகளுக்கும் நிர்ப்பந்தத்தை உண்டாக்க ஹம்சா முயற்சித்துக் கொண்டிருக்கிறார். தமிழக முஸ்லிம்கள் இதை எந்தளவு அனுமதிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை" என்கிறார்கள் இவ்வாறு 'நக்கீரன்' ஏடு தெரிவித்துள்ளது.(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# இல்லாத தீர்வுத் திட்டத்தை இருப்பதாகக் காட்டும் முயற்சி

விடுதலைப் புலிகளுடன் தமது அரசு நடத்தும் பேச்சுகளின் போது அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தாம் முன்வைக்கத் தயார் என்று பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததன் மூலம் பலருக்கும் எதிர்பாராத அதிர்ச்சியை அளித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

எத்தகைய தீர்வு யோசனையை அவர் வழங்கப் போகின்றார்? எந்த அடிப்படையில் அது தயாரிக்கப்பட்டது? தற்போதைய இறுக்கமான - நெகிழ்வுத் தன்மையற்ற - அரசமைப்புக்கும் ஒற்றையாட்சி முறைக்கும் வெளியில் வந்து, ஈழத் தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் அடிப்படை விடயங்களைக் கொண்டதாக அந்தத் தீர்வுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைப்பாரா? - என்ற கேள்விகளை இப்போதைக்கு ஒருபுறம் ஒதுக்கி விடுவோம். உண்மையில் அத்தகைய தீர்வுத் திட்ட யோசனை ஒன்று இலங்கை அதிபரிடம் இருக்கின்றதா என்ற கேள்வி குறித்துச் சிந்தித்துப் பார்ப்பதே இப்போதைய கட்டத்தில் பொருத்தமானதாக இருக்கும்.

சர்வதேச அரசியல் பொறி வலைக்குள் சிக்குண்டிருக்கும் தனது இக்கட்டுக் காரணமாக அதிலிருந்து தப்பி, வெளியே வருவதற்காக வெளிநாட்டில் போயிருந்து கொண்டு இவ்வாறு வெறும் கையால் முழம் போடும் அறிவிப்பை அவர் விடுத்தாரா என்ற சந்தேகம் தமிழர்களுக்கு எழாமல் இல்லை.

*"நான் ஆட்சிக்கு வந்தால் தீர்வுக்கான இணக்கத் திட்டம் ஒன்றை எட்டுவதற்காக நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தும் சகல ஜனநாயகக் கட்சிகள், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படாத கட்சிகள், மகா சங்கத்தினர், பிற சமயப் பெரியார்கள், சிவில் அமைப்புகள் - குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள அமைப்புகள் - ஆகிய தரப்புகளுடன் தனித் தனியாகக் கலந்துரையாடல்களை நடத்துவேன். அத்தகைய உரையாடல்களை மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்வேன்."* - என்று தமது தேர்தல் கால வாக்குறுதியான மஹிந்த சிந்தனையில் தெரிவித்திருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவர் அதிகாரத்துக்கு வந்து மூன்று மாதங்கள் அல்ல; இப்போது பத்து மாதங்கள் கடந்து விட்டன. ஆனாலும், அரசுத் தரப்பு பிரேரிக்கக் கூடிய தீர்வு யோசனைகளைக் கண்டுபிடிப்பதற்காக அவரது அரசு பல தரப்பினருடனும் நடத்துவதாகக் கூறப்படும் பேச்சு - முன்னைய சிங்கள அரசுகள் இதேபோன்ற விடயத்துக்காக நடத்திய பேச்சுகள் போன்று - இன்னும் அரைக் கிணறு கூடத் தாண்டவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். அப்படியிருந்தும் தீர்வு யோசனை ஒன்றைத் தாம் முன்வைக்கப் போகின்றார் என முற்கூட்டியே - இப்போதே - அவர் தெளிவாக அறிவித்திருக்கின்றமை ஒரு புதிய திருப்பம்தான்.

யதார்த்தவாதி எனக் கருதப்படும் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வை வழங்கப் போகின்றார் என்பதை அறிவதற்கு அவருக்கு சிறிது கால அவகாசம் வழங்கிப் பொறுத்திருப்பது நல்லது என கடந்த மாவீரர் தின உரையில் தலைவர் வே. பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார். ஆனாலும், பத்து மாத காலம் கடந்தும் அவர் முன்வைக்கப் போகும் தீர்வு யோசனை என்னவென்பது இன்னும் வெளிவரவில்லை. இப்போதுதான் யோசனைத் திட்டம் ஒன்றை அவர் முன்வைப்பார் என்ற அறிவிப்பே அவரிடமிருந்து வெளிவந்திருக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தி இலங்கை அரசுக்கும், அதன் தலைமைக்கும் 'சூடு' கொடுக்கும் விதத்தில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகள் அறிக்கை வெளியிட்டுள்ள பின்னணியில் -

சூடானின் டார்பூரிலும், இலங்கையிலும் நிவாரண மற்றும் தொண்டுப் பணிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடூரங்கள் குறித்து திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸில் முஸ்தீபு செய்து வருவதாக அதிரடிச் செய்திகள் வெளியான சூழ்நிலையில் -

இலங்கையின் மதச் சுதந்திரம் தொடர்பில் ஜனநாயகம், மனித உரிமைகள், மத விவகாரம் சம்பந்தமான அமெரிக்க மையத்தின் காட்டமான அறிக்கை வெளியாகியுள்ள இக்கட்டத்தில் -

ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் சிபாரிசுகளை ஏற்க மறுத்து, இலங்கை உயர் நீதிமன்றம் அவற்றை நடைமுறைப் படுத்த முடியாது என நிராகரித்த நிலையில், இலங்கையில் மனித உரிமைகள் விவகாரம் சர்வதேச சிரத்தையையும், கவலையையும் உருவாக்கியுள்ள சமயத்தில் -

புலிகளின் முன்னால் தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கத் தாம் தயார் என்ற அறிவிப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கு நாடுகளில் போயிருந்து கொண்டு திடீர்ப் பிரகடனமாக முன்வைக்கின்றார்.

அவருக்கும், அவரது இலங்கை அரசுக்கும் எதிராக சர்வதேச ரீதியில் எழுந்து வரும் அழுத்தங்கள், அரசியல் நெருக்கடிகள், அவற்றின் மூலம் எழக்கூடிய பொருளாதார மற்றும் இன்னோரன்ன பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஒரு தந்திரமாகவே இந்த அறிவிப்பு வெளிவருவதாகத் தமிழர்கள் கருத வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

தமது மேற்குலக விஜயத்தின்போது தம் மீது நேரடியாகத் தொடுக்கப்படக்கூடிய - தாம் முகம் கொடுக்க வேண்டி நேரக் கூடிய - இக் கட்டான கேள்விகளிலிருந்தும், நியாயம் கோரும் வினாக்களில் இருந்தும் தாம் தப்பித்துக் கொள்வதற்கான முன் ஆயத்த விடையாகவே இந்த 'தீர்வுத் திட்டம் தயார். அதைப் புலிகள் முன் வைப்பேன்' என்ற 'ரெடிமேட்' பதிலை ஜனாதிபதி துரும்பாக வைத்திருக்கிறார் எனவும் கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஈழத் தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளையும் சட்டபூர்வமான எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதற்கு அடிப்படைச் சாத்தியமான இணக்கப்பாடு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென்னிலங்கையில் ஏற்படுத்தியமைக்கான அசுமந்தமே இன்னும் வெளிப்படவில்லை. அப்படியிருக்கத் தீர்க்கமான திட்டம் ஒன்று தென்னிலங்கை இணக்கத்தோடு முன்வைக்கப்படும் என்ற அவரது அறிவிப்பு நம்பிக்கை தருவதாக இல்லை.

சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றுவதற்காக, தாம் மணலைக் கயிறாகத் திரித்துள்ளார் என்பது போல கயிறு விடுகிறார் அவர்.

'எழுதாத நாடகத்தில், இல்லாத பாத்திரத்தில், எல்லோரும் நடிக்கின்றோம்' என்ற சினிமாப் பாடல் அடிபோன்று, எழுதாத தீர்வுத் திட்டத்தை - இல்லாத யோசனையை - சர்வதேசத்துக்கு முன்வைக்கிறார் ஜனாதிபதி. அவ்வளவே!

# பெற்றோல் இன்மையால் வீடுகளுக்குள் முடங்கி விட்ட மோட்டார் சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், செப் 19

எரிபொருள் இன்மையால் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, மோட்டார் சைக்கிள்கள் இவ்வாறு எரிபொருள் இன்மையால் பயன்படுத்த முடியாது வீடுகளுக்குள் விட்டுப் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக, எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம், பங்கீட்டு அடிப்படையில் எரிபொருள் வழங்குவதற்கான முன்னோடியாக பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பல மணித்தியாலங்கள் காத்திருந்தும், பலநாள்கள் அலைந்தும் எரிபொருளுக்கான பங்கீட்டு அட்டை பெற்ற போதிலும் - பலாபலன் எதுவும் கிடைக்கவில்லையெனப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்று திரும்புவதும் ஒரு கடமையாக- வேலையாக மாறியுள்ளதாகவும் பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர். (68)

# வைத்தியசாலை அம்புலன்ஸ் சேவைக்கு மக்கள் பாராட்டு

உடுப்பிட்டி, செப். 19

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவையினை வடமராட்சி மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

தற்போது எரிபொருள் தட்டுப்பாடான காலத்தில் இராணுவக் கெடுபிடிகள் மற்றும் ஊரடங்கு நேரங்கள் என்று பாராமல் இவர்கள் சேவை புரிவதாகவும், அது பெரும் வரப்பிரசாதமாக உள்ளதாகவும் பொது மக்கள் பாராட்டுகின்றனர். (ப-155)

# கள்ளச்சந்தையில் விற்பனையாகும் பெற்றோலில் கலப்படம் எனப்புகார்

அரியாலை, செப். 19

குடாநாட்டில் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படும் பெற்றோலில் கலப்படம் அதிகளவில் காணப்படுவதாக மோட்டார் சைக்கிள் செலுத்துநர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

கலப்படம் செய்யப்பட்ட பெற்றோல் வீதியோரங்களில் வைத்து லீற்றர் 400 ரூபா முதல் 450 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும்- தெரிவிக்கப்படுகின்றது.

குறைந்தளவு பெற்றோலில் மண் எண்ணெய் மற்றும் ரின்னர் அதிகளவில் கலக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும்-

இவ்வாறு கலப்படம் செய்யபட்ட பெற்றோலைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளை செலுத்திச் செல்லும் போது இடையிடையே மோட்டார் சைக்கிள் இயந்திரத்தில் கோளாறு ஏற்படுவதாகவும் - மோட்டார் சைக்கிள் செலுத்துநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (17)

# டீசல் ஓரளவு கிடைத்ததை அடுத்து நேற்று முதல் 8 மணிநேரம் மின்சாரம்

யாழ்ப்பாணம், செப். 19

டீசல் ஓரளவு கிடைத்ததை அடுத்து குடாநாட்டில் எட்டு மணிநேரம் மின் விநியோகத்தை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓரளவு டீசல் கையிருப்பில் கிடைத்ததை அடுத்து மின் விநியோகம் வழமைபோல் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும்-

தினமும் எட்டு மணிநேரம் வரையில் மின்விநியோகம் இடம்பெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பகல் நேரத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையிலும் -

இரவு நேரத்தில் மாலை 6.30 மணி முதல் 10.30 மணி வரையிலும் - சகல பிரதேசங்களுக்கும் மின் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

இந்தநேரம், சிலபகுதிகளுக்கு ஓரிரு மணிநேரம் வித்தியாசமாக அமையும் என்றும் - மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

# சின்னக்கடைச் சந்தையில் நேற்றுமுதல் மீண்டும் வியாபாரம்

குருநகர், செப்.19

குருநகர் சின்னக்கடை பொதுச் சந்தையில் நேற்றுமுதல் மீன், மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற அரசு-புலிகள் மோதலைத் தொடர்ந்து மேற்படி சந்தையில் வியாபாரம் நடைபெறவில்லை.

சந்தையின் முன்னால் அமைந்துள்ள வீதிகளில் வியாபாரம் நடைபெற்று வந்தது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்

சந்தையில் மீண்டும் விற்பனை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தைக்கு அருகிலுள்ள வீதிகளில் சுலபமாகப் போக்குவரத்து நடைபெற்று வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. (51)

# தீப்பெட்டிக்கு பெரும் தட்டுப்பாடு கள்ளச்சந்தையில் ஒன்று 10 ரூபா

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்.குடாநாட்டில் தீப்பெட்டிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒரு தீப்பெட்டி பத்துரூபாவாகக் கள்ளச்சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரம் இல்லாத நிலையில் விளக்கை கொளுத்துவதற்குக் கூடத் தீப்பெட்டியை வாங்கமுடியாத நிலையில் குடாநாட்டு மக்கள் உள்ளனர். (203)

# கப்பல் பயணத்திற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை வடமராட்சியிலிருந்து விண்ணப்பித்தோர் கவலை

உடுப்பிட்டி, செப். 19

கப்பல் மூலம் பயணம் செய்ய விண்ணப்பித்த வடமராட்சி மக்கள் தமக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என முறைப்பாடு செய்கின்றனர்.

கப்பல் மூலம் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களுக்கு பயணிக்கச் சந்தர்ப்பம் கிடைத்த போதும் வடமராட்சியில் இருந்து விண்ணப்பித்தோருக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பல் ஒழுங்கு செய்யும் பிரிவினரின் திடீர் அறிவித்தல்களாலும் ஊரடங்கு அமுலில் இருப்பதாலும் போக்குவரத்து வசதிகள் சீரின்மையாலும் வடமராட்சி மக்கள் உரிய நேரத்திற்குச் செல்லமுடியாமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமையைக் கருத்திற் கொண்டு யாழ்.அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் வடமராட்சியில் இருந்து விண்ணப்பித்தோருக்கு கப்பல் பயணம் செய்ய ஆவண செய்து உதவ வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (ப-155)

# பங்கீட்டு அட்டைக்கு 2லீற்றர் மண்எண்ணெய்

அரியாலை, செப். 19

குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் சிலவற்றில் தற்போது பங்கீட்டு அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையங்களில் இருப்பில் உள்ள மண்எண்ணெய் சங்கத்தின் கிளைகள் ஊடாகப் பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (17)

## கூட்டுறவுக்கிளைகள் இடமாற்றம்

அரியாலை, செப். 19

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நீராவியடி 16ஆம் இலக்க கிளை, ஸ்ரேசன் வீதி 28ஆம் இலக்க கிளை ஆகியன தற்போது கே.கே.எஸ் வீதியில் உள்ள சங்கத்தின் தலைமை அலுவலகக் கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலை மற்றும் பாதுகாப்பு காரணங்களிற்காகவே மேற்படி கிளைகள் இடமாற்றி வைக்கப்பட்டுள்ளன என சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

# அத்தியாவ்சிய உணவுப் பொருள்களை சிறந்த முறையில் விநியோகிக்கவும்!

## கூட்டுறவு அலுவலர்களுக்கு அரச அதிபர் அறிவுரை

அரியாலை, செப். 19

கூட்டுறவு சங்ககிளைகளில் பாவனையாளர்களுக்கான அத்தியாவசிய பொருள்கள் சிறந்த முறையில் விநியோகிக்கப்பட வேண்டும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தில் முறைகேடுகள் இடம்பெறக் கூடாது. அத்தியாவசிய பொருள் விநியோகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரசன்னம் மிக முக்கியமானது.

அத்துடன், பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் நிறை மற்றும் அதன் தரங்களையும் கூட்டுறவு அதிகாரிகள் மேற்பார்வை செய்து உறுதிப்படுத்த வேண்டும் என்றும்- அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (17)

# தீவுப்பகுதிகள் பல முற்றாக துண்டிக்கப்பட்டுவிடும் நிலை

## எரிபொருள் தட்டுப்பாட்டின் எதிரொலி

நல்லூர், செப். 19

குடாநாட்டில் தொடர்ந்தும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகள் யாழ். பெருநிலப்பரப்புடனான தொடர்புகளில் இருந்து முற்றாகத் துண்டிக்கப்படும் நிலை ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது.

டீசல் தட்டுப்பாட்டினால் இப்பகுதிகளுக்கான படகுச் சேவைகள் தற்சமயம் ஒருதடவை மட்டுமே இடம்பெறுகின்றது. இந்தநிலை நீடிக்குமானால் படகுப் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடையக்கூடிய நிலை தோன்றலாம் என்றும்-

யாழ்.நகரில் இருந்து இப்பகுதிகளுக்கான அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதில் கூட ப.நோ.கூ.சங்கங்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர். (ப-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



''இப்பிறப்பில் எமையெல்லாம் நற்பிறப்பாய் ஆக்கி வைத்தீர் எப்பிறப்பில் காண்போம் இனி''

திருமதி
**நாகமுத்து சின்னம்மா**

தோற்றம்
01-07-1920

மறைவு
30-09-2005

திதி-19-09-2006

பார் புகழும் பார்த்திப வருடம் புரட்டாதி வெள்ளிக்கிழமை
சீர் நடையாள் சின்னம்மா அபரபக்க திரியோதசி திதியில்
நாகமுத்து என்பவருடன் வாழ்ந்த நாள் நீத்து
சீரணியாள் பாதமலர் சேர்ந்த நாள்

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டுடை,
மானிப்பாய். (53759)

செல்வராஜா குடும்பம்,
ரவீந்திரன் குடும்பம்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 12 . 1948



மறைவு
19 . 09 . 2000

**அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா**

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தரும்,
U.N.D.P.உத்தியோகத்தரும்)

அன்பின் அரவணைப்பாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்த எமது அன்புத் தந்தையே!
ஆண்டு ஆறு ஆனாலும் ஆறாது ஆறாது!
உங்கள் பிரிவுத் துயர் இவ்வுலகினின்று நீங்கள் மறைந்தாலும்
என்றும் எம் உளமெல்லாம் வாழ்கின்றீர்கள்
உமது ஆத்மா சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
அருமைப்பிள்ளைகள்,மருமகன்.

2,இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (53776)

## வங்கியாளர் பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

வங்கியாளர் பரீட்சையை எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளிலும்30ஆம் திகதியிலும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்த சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக கொழும்பு வங்கியாளர் கற்கை நிலையத்தின் பரீட்சைகளுக்குப் பொறுப்பான அத்தியட்சகர் சி.ஜே.பெர்ணான்டோ அறிவித்துள்ளார்.

இதுவரை தேர்வு அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாதவர்கள் தங்களுக்குரிய பதிவு இலக்கத்தையும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களையும் பரீட்சை நிலையத்துக்கு கொண்டுசென்று பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

இந்தப் பரீட்சையின் இணைப்பாளர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினமும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்ப.விக்னேஸ்வரனும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்.பல்கலைக் கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் கடந்த ஓகஸ்ட் மாத முற்பகுதியில் கோரப்பட்டிருந்த பொதுநிர்வாகத்தில் கலைமாணிப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பிப்பதற்குரிய முடிவு திகதி ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக உயர் பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)


## மெலிந்த சரீரத்திற்கு வலிமையான வளர்ச்சி

APPETON
WEIGHT GAIN™
சக்திமிகு பால்மா பானம்

வளர்ந்தவர்க்கும் பிள்ளைகளுக்கும்




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

the ad factory


## ஆறாத துயரத்தோடு
## ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18 - 04 - 1949



உதிர்வு
24 - 09 - 2000

திதி: அபரபக்க துவாதசி 19-09-2006

**திருமதி சிவப்பிரகாசம் புஸ்பராணி**

அம்மா எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் அன்பு முகம் காண ஆவலாய் இருக்குதம்மா
ஓடோடி வந்தெம்மை அரவணைத்து ஆறுதல் தர மாட்டீர்களா?
எங்கள் உயர்வுக்காக அயராது உழைத்த நீங்கள் - இன்று
எம்முடன் இல்லையே அம்மா! எங்களின் நல்வாழ்வு காண
எம்முன்னே வாருங்கள் அம்மா.

பொ.சிவப்பிரகாசம்
பொற்பதி வீதி, கொக்குவில்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(53777)

## பன்னிரு திங்கள் மறந்துதான் வந்ததையா...!

எமது தெய்வம்

# அமரர் பொன்னுத்துரை சரவணபவான்

(ராசா மண்டைதீவு-06)



அன்னை மடியில்
26-04-1955

ஆண்டவன் அடியில்
01-10-2005

ஈராறு திங்களாய் ஈரவிழி காயமுன்
எம் அப்பா வருவாரென்று
இன்றுவரை காத்து உள்ளோம்
ஏன் அப்பா எம்மையெல்லாம்
ஏமாற்றி நிற்கின்றாய்
அரை நிமிடம் எம்மை விட்டு
அப்பா நீ பிரியமாட்டாய்

ஆண்டு ஒன்றாய் அலைகின்றோம்
எங்கு அப்பா இருக்கின்றாய்?
கனவில் நீ வருகின்றாய்
கடுகதியில் மறைகின்றாய்
கண்டது நாம் கனவு என்று
கலங்கி ஏங்குகின்றோம்
என்னை நம்பி வந்த உன்னை
ஒருபோதும் பிரியமாட்டேன்
ஆறுபத்து ஆண்டு என்ன

ஆயிரமாம் ஆண்டுகளை
அரவணைத்தே காத்திடுவேன்- என்ற
என் தெய்வம் எங்கே?
என்னை விட்டு எங்கு சென்றீர்
காலம் வரும் கணவன் நீ வருவாயென்று
ஏமாந்த நான் இன்று
ஏக்கத்துடன் வாழ்கின்றேன்

ஒட்டி உருக்குலைந்து-உன் நினைவால்
ஓடாய்ப் போனார்கள்
உனைச் சுமந்த பெற்றோர்கள்
ஒன்றாய்ப் பிறந்துவிட்ட
உன் அன்பான உடன்பிறந்தோர்
உன் நினைவால் அரை உயிராய் போயினரே
தொலைபேசித் தொணதொணப்பில்
உன் குரல் கேட்காதா என்றுதான்
துடிக்கின்றார் தொலையில் வாழ்-சகோதரர்கள்.

எம் அப்பா! எம் செல்வா! தெய்வமே நீ.எங்குதான் இருந்தாலும் அங்கு நீ அமைதி கண்டு சாந்தி பெற நல்லூரான் திருவடியைக் கண்ணீரால் வேண்டுகின்றோம்.

இல.59, பொற்பதி வீதி, கொக்குவில்.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிம்பிறவுண் அடிகளார் எங்கே?

கடந்த ஒரு மாத காலமாக கிறிஸ்தவர்கள் மத்தியில் மட்டுமல்ல மனித நேயமுள்ள ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஜிம்பிறவுண் அடிகளார் எங்கே? என்ற வினா தவிர்க்க இயலாத ஒன்றாக மீண்டும் மீண்டும் எழுகின்றது.

### யார் இந்த ஜிம்பிறவுண்?

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கிராமத்தில் பெற்றோருக்கு மூத்த பிள்ளையாக பிறந்து கத்தோலிக்க திருச்சபையின் பணிக்குருத்துவத்திலே தன்னை இணைத்துக் கொண்ட 34 வயதாகிய ஒரு இளங் குரு தான் இவர். குருவாகி இரண்டாண்டுகள் மன்னாரில் பணியாற்றிய பின் யாழ்ப்பாண மறை மாவட்டத்தில் பணியாற்ற கடந்த யூலை மாதம் தான் அவர் வருகை தந்தார். மண்டைதீவு - அல்லைப்பிட்டி பங்கு பணியாளராகப் பொறுப்பேற்று சில நாட்களுக்குள்ளாகவே அவர் தனக்குரிய சிலுவையைச் சுமக்க நேரிட்டது.

### மக்களைப் பிரியாத...

கடந்த 11ம் திகதி வட பகுதியில் வெடித்த போரில் முக்கிய ஒரு களமுனையாக அல்லைப்பிட்டியும் அமைந்திருந்தது. பரஸ்பரம் பரிமாறப்பட்ட ஷெல்களின் ஓசையும், வேட்டொலிகளும் திடீரென மக்களை அச்சத்துக்குள்ளாக்க, இறைவனின் இல்லம் தான் ஒரே தஞ்சமென மக்கள் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். மிக நீண்டதாக நகர்ந்த அந்த கரிய இரவில் எஞ்சிநின்றதெல்லாம் ஷெல் ஓசைகளும் மக்களின் வேண்டுதல் ஒலிகளும் தான். 13ம் திகதி ஞாயிறு பலருக்கு புலர்ந்த பொழுது, ஆலயத்திலும் அதன் அருகிலும் தஞ்சம் புகுந்திருந்த 20க்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர இரவானது. இறந்தவர்களை ஒரு புறமாக விட்டு விட்டு படுகாயத்தினால் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவர்களையும் அச்சத்தில் உறைந்துபோன ஏனையோரையும் பாதுகாப்பது தனது பொறுப்பென துணிவு கொண்டார் ஜிம்பிறவுண் அடிகளார்.

சூரியக் கதிர்கள் இருள் முகம் துடைக்கும் அந்த அதிகாலைப் பொழுதில் அப்பாவி மக்களின் கண்ணீரும் செந்நீரும் துடைக்க வெள்ளைக் கொடியேந்திப் புறப்பட்டார் ஜிம்பிறவுண் அடிகளார். அவர் முன்நடக்க தயங்கித் தளர்ந்து காயப்பட்டோரையும் சுமந்தபடி பின்செல்லுகின்றனர் மக்கள். அல்லைப்பிட்டிச் சந்தியை அவர்கள் அணுகிய போது ஓரடி முன்வைத்தாலும் உயிரில்லை என்ற கட்டளை பிறக்கின்றது. அனைவரையும் அச்சம் ஆட்கொள்ள மக்களுக்காக மண்டியிட்டார் ஜிம்பிறவுண் அடிகளார். முழந்தாட படியிட்டு இறைவனிடம் மட்டுமே ஏந்திய கரங்களை... உயர விரித்து தன் மக்களுக்காக உயிர்ப்பிச்சை கேட்டார் அவர். அவரை மட்டும் முன் வரவழைத்து சிறிது நேரம்பேசிய பின் விரும்பினால் அவரை மட்டும் போக அனுமதி அளிக்கப்பட்டது. மக்களைப் பிரிய திடமாகவே மறுத்து விட்டார் அவர். இரக்கத்தின் பொருட்டு அல்லா விட்டாலும் அவரின் தொல்லையின் பொருட்டு காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்கும் ஏனையோரைல ஊர்காவற்றுறைக்கும் எடுத்துச் செல்ல அனுமதி கிடைத்தது.

இவ்வேளையில் மீண்டுமொரு சோதனை. இளவயதினரை மட்டும் தனியே பிரித்து நிறுத்தி விட்டு ஏனையோரை அழைத்துச் செல்லுமாறு பணிப்பு. மீண்டும் குருவின் திடமான மறுப்பு. எக்காரணம் கொண்டும் யாரையும் விட்டுச் செல்ல மறுத்தது நல்ல ஆயனுக்குரிய அவரது அன்புள்ளம். "என் மக்களை போக விட்டு விடுங்கள்" என்று உறுதியோடு நின்ற அவரை நவீன மோசே என்று வரைவிலக்கணப்படுத்தினாார் அவருடைய ஒரு குரு நண்பன்.


### முகமற்றோரின் முகமாக குரலற்றோரின் குரலாக

மேற்சொன்ன நிகழ்வு நடந்து சரியாக ஒரு வாரத்தின் பின்னாக 20ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மண்டைதீவில் இருந்த தம் மக்களுக்கு சமயக் கடமைகளை நிறைவேற்றி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட ஊரடங்கு தளத்தப்பட்ட வேளையிலே திரு. விமலதாஸ் என்னும் உதவியாளரோடு புறப்பட்டார் அருள்தந்தை. மண்டைதீவு செல்ல அனுமதி கிடைக்கவில்லை. யாழ்நகர் வந்து மீண்டும் 2மணியளவில் ஊர்காவற்றுறைக்கு திரும்பும் வழியில் அனுமதி பெற்று அல்லைப்பிட்டியில் நுழைந்தார் அருள் தந்தை. அன்று அல்லைப்பிட்டியில் நுழைந்த ஜிம்பிறவுண் அடிகளாரும் அவரது உதவியாளரும் ஒருமாதமாகியும் இன்றும் திரும்பவேயில்லை.

1996இன் பிற்காலத்திலிருந்து இன்று வரை காணாமல் போனோரின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. மற்றும் கடந்த டிசம்பர் மாதத்தின் பின் குறிப்பாக சென்ற 11ம் திகதியின் பின் காணாமல் போனோரின் எண்ணிக்கை அச்சம் தரும் வகையில் அதிகரித்து வருகின்றது. புதைகுழிகள் இல்லாமலே புதையுண்டவர்களும் இடுகாடுகள் இல்லாமலே எரியுண்டவர்களும் இவர்களில் அநேகம். இவர்களது முகம் மண்ணில் மறைந்து போயிற்று. இவர்களது குரல் காற்றில் கரைந்து போயிற்று. முகம் அற்ற இவர்களின் முகமாகவும் குரல் அற்ற இவர்களில் குரலாகவும் எழுச்சி காணுகிறார் எங்கள் ஜிம்பிறவுண்.

இன்று காணாமல் போனோரின் பிரதிநிதியாக அவரது முகம் உலகில் வலம் வருகிறது. அவர்கள் அனைவரதும் பெயராக இவரது பெயர் உரத்து உச்சரிக்கப்படுகின்றது. காணாமல் போவோருக்காய் குரல் கொடுப்போரின் பேனாக்களின் கூர்முனையில் இவரது வரலாறு உயிர்ப்பாய் துடித்துக் கொண்டிருக்கிறது.

சோதரா!
இன்றும் உன்னைத் தேடி
நாங்கள்
காற்றைக் கலைக்கிறோம்
கடலைக்
கேட்கிறோம்
கணீணீர் வடிக்கிறோம்.
ஆயினும்
எம் கைக்கெட்டா
உயரத்தில்
நீ எம் மக்களின்
புலம்பல் பாட்டாய்...



எம் மக்களின் புலம்பல் பாட்டாய்...

**பதில் கேட்டு...**

● ஆயர் அவர்கள் இரண்டு வேண்டுகோள்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். ● திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். ● இலங்கை ஆயர் பேரவை வேண்டுகோள்களை சமர்ப்பித்துள்ளது. ● யாழ் நீதி சமாதான ஆணைக் குழு மூன்று வேண்டுகோள்களை விடுத்துள்ளது. ● மன்னார் மறைமாவட்டம் பேரணி நடாத்தி வேண்டுகோள் சமர்ப்பித்துள்ளது. ● திருமலை - மட்டுநகர் மாவட்டம் பேரணி நடாத்தி வேண்டுகோள் சமர்ப்பித்துள்ளது. ● புதுக்குடியிருப்பில், கிளிநொச்சியில் உண்ணாவிரதங்களும் பேரணிகளும் நடாத்தப்பட்டு வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ● யாழ் மறைமாவட்டத்தில் தொடர்ச்சியான சுழற்சிமுறை உண்ணாவிரதம் யாழ்பேராலயத்தில் நடாத்தப்பட்டது. ● பங்குகள் தோறும் இன்னும் உண்ணா நோன்பும் வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. வேண்டுகோள்கள் பங்குகளால் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வருகின்றன. ● சர்வதேச மன்னிப்புச்சபை இன்னும் இதர மனித உரிமை அமைப்புக்கள் வினா எழுப்பியுள்ளது.

**இருந்தும் இன்று வரையும் தெளிவான பதிலேதுமில்லை தொடர்ந்தும் தேடுகின்றோம்.**

## — விமலதாஸ் - பொதுப்பணியாளன் —

முதுமை... தளர்ந்த நடை... மெலிந்த தோற்றம்... முகத்தில் நரைத்த தாடி... மெதுவாக நடந்து எனக்கு முன் அமர்ந்தார் வென்சஸ்லாஸ். இவர்தான் ஜிம்பிறவுண் அடிகளாருடன் உதவியாக மோட்டார் சைக்கிளில் சென்றபோது காணமல் போன திரு. வின்சன் விமலதாசுடைய தந்தை. மகன் காணாமல் போன சோகத்தில் இருக்கிறார் என்ற உணர் வோடு ஆறுதலாக ஏதாவது சொல்வோம் என்ற எண்ணத் தோடு உரையாடலை வளர்த்த போதுதான் எனது முகத்தில் அறைந்தது அந்த முதியவரினுள் உறைந்திருந்த சோகம். 5 ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையையும் செல்வங்களாக பெற்றெடுத்த அவர் ஏற்கனவே இரண்டு ஆண் பிள்ளைகளைக் காணாமல் போன பட்டியலில் இழந்து விட்டிருக்கிறார். 1990ஆம் ஆண்டியிலே கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அந்த இருவர் காணாமல் போயினர். விமலதாஸ் காணமல்போனது அந்த வரிசையில் மூன்றாவது.



விமலதாஸ் துடிதுடிப்பானவர். எப்போதும் ஆலயப் பணிகளுக்கும் பொதுப் பணிகளுக்கும் முன்னிற்பவர். சிறுவனாக, இளைஞராக திருமணமானவராக எந்நிலையிலும் சமய சமூக விடயங்களில் அல்லைப்பிட்டியில் முன்னின்று உழைத்தே வந்துள்ளார். ஊரில் உள்ள சமய சமூக அமைப்புக்களில் பல தடவைகளில் பல விதமான பணிப் பொறுப்புக்களை கையேற்று சிறப்பாக பணியாற்றியுள்ளார். 'ஐயோ' என்றால் உதவிக்கு வரும் அவரது இயல்பு தான் இன்றைய அவரது நிலை வரை அவரைக் கொண்டு வந்துள்ளது. இவரது சேவை மனத்தை அடையாளம் கண்டு தான் ஜிம்பிறவுண் அடிகளார் அங்கு பணியேற்ற சில நாட்க ளிலேயே எல்லா விடயங்களுக்கும் இவரது துணையையே நாடியுள்ளார். அல்லைப்பிட்டியிலிருந்து மக்களை மீட்டு வந்து அவர்களுக்கு உணவளித்து ஜிம்பிறவுண் அடிகளார் ஆற்றிய ஒவ்வொரு பணியிலும் தோளோடு தோள் நின்று விமலதாசும் உதவியுள்ளார். அதனால் தானோ என்னவோ பணியில் மட்டுமல்ல பலியிலும்...

இளம் மனைவியும் நடந்ததன் தார்ப்பரியத்தை உணராத ஐந்து பிள்ளைகளும், அறுவரில் எஞ்சிய மூன்று பேரில் ஒருவரது மனைவி பிள்ளைகள் காயங்களோடு இன்றும் வைத்தியசாலையில் இருகக யாருக்காக அழுவ தென்று தெரியாத அந்த முதியவரும்... என்னிடம் எஞ்சியிருந்தது பெருமூச்சு மட்டும்தான்.

**காணமல் போய் 3ந் நாள் நினைவில்**

**ஜிம்பிறவுண் அடிகளாரைத்தேடும் குரு நண்பர்களின் இதயக் குமுறல்**

### கடவுளும் பார்த்து நிற்க...

காற்றும்
கடலும்
ஏன்
கடவுளும் பார்த்து நிற்க.
அவர்
மறைந்து போனார்.

உப்புக் காற்றுக்கும்
தெரியும்
தந்தையின் கதை.
உவர்
நிலத்துக்குத்
தெரியும்
அவரின் தடம்
ஓயாமல்
இரையும்
அலைக்குத் தெரிந்திருக்கும்
அந்த
அவலம்.

அவர்
கலகம் செய்யவில்லை
கதவடைப்பு செய்யவில்லை
அறிக்கை விடவில்லை
ஆயுதம் ஏந்தவில்லை.

எறிகணைகள்
வீழ்ந்த போது
வாழ்ந்தார்
காயங்கள்
மரணங்கள் நிகழ்ந்தபோது
இருந்தார்.
அச்சம்
சூழ் அந்தப் பொழுதில்
எல்லாம்
அவர்
இருந்தார்.

அன்றாடம்
காணாமற் போகும்
பத்தோடு
பதின் ஒன்றா?
நெஞ்சு
அழுகின்றது.

எங்கே?
கேள்விகள்
வியாபிக்கின்றன
குற்றம் என்ன?
யாரிடம் முறையிடுவோம்?

அச்சடிக்கப்பட்ட
விடைகளே
வந்து
கொண்டிருக்கின்றன.
திட்டமிட்ட
பதில்களே
கௌரவமாக
கிடைக்கின்றன
''சென்றுவிட்டார்''
''போய்விட்டார்''
''கடந்துவிட்டார்.''

மக்களோடு
இருக்கவிரும்பினார்
காயங்களுக்கு
மருந்தாகியிருந்தார்.
நெஞ்சுக்கு
நேரே
மரணத்தின் பற்கள்
நீண்ட போதும்
அவர்
அசையவில்லை.

இதோ
குருத்துவம்
இவரால்
பெருமையடைகிறது.

உப்புலர்ந்த மண்ணே
வாரித் தரும்
கடலே
வீசும் கோடைக்காற்றே
உனக்குத்
தெரியும்
அவனது
இறுதி மூச்சு
எவர்
கையில்
இருந்தது என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழைப்புக் கட்டளை

இல. 16, பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில்

டாக்டர் மகாதேவன் நிரஞ்சன்
தம்பைமடு மாவட்ட வைத்தியசாலை
மன்னார் வீதி, வவுனியா.

வழக்கு இல மணநீக்கம்/683 எதிர் வழக்காளி

நிரஞ்சன் வனஜா
இல. 421, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள் வழக்காளி தனக்கும் உமக்கும் இடையில் நடைபெற்ற திருமணப் பதிவை இரத்துச் செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.ஸ்ரீமோன் பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.
(53797)

து.ஸ்ரீமோகன், பதிவாளர்.

2006ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 07ஆம் நாளாகிய இன்று

## கண்ணீர் அஞ்சலி

எமது அமைப்பின் உறுப்பினர் பிரம்மஸ்ரீ
பா.சுந்தரராஜசர்மா அவர்களின் பாசமிகு தந்தை

**பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ணசர்மா**

[ஆயக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானம் - புன்னாலைக்கட்டுவன்]

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், எமது அமைப்பின் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா இறைபதமெய்திடப் பிரார்த்திக்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
தலைமைச் செயலகம்,
ஆனைப்பந்தி.

(53801)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் சு.நடராசா அவர்களின்
அன்பு மாமன்

**அமரர் அருணாசலம் சரவணமுத்து**

அவர்கள் 28.08.2006 அன்று சிவபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(53796)

ஆசிரிய வட்டம்
யாழ். மத்திய கல்லூரி.

| ஈர விழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவலைகள் | பாச நினைவுகளுடன் பதினெட்டாம் மாத நினைவலைகள் |
| --- | --- |
|  |  |
| அமரர் திருமதி வே.கனகம்மா<br>(மனைவி)<br>பிறப்பு: 01-11-1939<br>இறப்பு: 19-09-2004 | அமரர் க.வேலாயுதபிள்ளை<br>(கணவர் - இ.மி.ச.)<br>பிறப்பு: 23-01-1926<br>இறப்பு: 29-03-2005 |

பாரினிலே எமைப் பெற்று பாரோங்க வாழவைத்து
பாதியிலே எமைவிட்டு பரலோகம் சென்றதுமேன்?

வே.சிவகுமாரன்,
45, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (53799)

என்றென்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
| --- | --- | --- |
| 25 - 05 - 1941 |  | 20 - 08 - 2006 |

**அமரர் நடராசா அருளானந்தம்**

(TRACTOR புறோக்கர் பெரியண்ணை)

20.08.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் கும்பத் தலைவர் அமரர் நடராசா அருளானந்தம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று [19.09.2006] செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (53798) மகன், சகோதரர்கள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

### திருமதி பாக்கியம் குழந்தைவேலு

(நாரந்தனை)

கடந்த 21.08.2006 அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவியும், அன்புத் தெய்வமுமாகிய **திருமதி பாக்கியம் குழந்தைவேலு** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.09.2006) எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: நாட்டு நிலைமை காரணமாக அன்னார் காலமான செய்தியை உரிய நேரத்தில் எவருக்கும் அறிவிக்க முடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

'கோகுலம்',
சங்கத்தானை,
சாவகச்சேரி. (சி/51011)

- குடும்பத்தினர்.

## தென்மராட்சி சமுர்த்தி பயனாளிகளுக்கு

தென்மராட்சி,செப்.19

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகளுக்கான முத்திரைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

முத்திரைகள் உடனடியாக பயனாளிகளுக்கு வழங்கப்படுவதற்காக அந்தந்தப் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி பயனாளிகள் தத்தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-117)

## வடமராட்சி பகுதியில் சிகரெட்டின் விலை ரூபா 32 வரை உயர்வு

உடுப்பிட்டி,செப்.19

வடமராட்சியில் சிகரெட்டின் விலை 32 ரூபாவரை உயர்வடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. சிகரெட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன் கிடைக்கும் சிகரெட்டுகளும் உச்ச விலைக்கு விற்கப்படுகின்றன. இதனால், சிகரெட் பாவனையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். (ப-155-203)

## நெடுந்தீவு பதில் உதவி அரச அதிபர்

நெடுந்தீவு உதவி அரச அதிபராக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபன் பதில் கடமையேற்றுள்ளார். நெடுந்தீவு உதவி அரச அதிபராகக் கடமையாற்றிய எம்.பற்றிக்டிறஞ்சன் யாழ். கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து மு.நந்தகோபன் பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ப-111)

### தவறிவிட்டது

8/6, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த தர்மராஜா குலசீலன் என்பவரது தேசிய அ.அட்டை (840074935V) 22.08.2006 அன்று சுதுமலைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (53787)

### தவறிவிட்டது

NPGH6104 மோட்டார் சைக்கிள், 9ஸ்ரீ9414 மோட்டார் கார் என்பவற்றின் பதிவுப் புத்தகங்கள், பெற்றோல் வழங்கும் அட்டைகள், காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன 08.09.2006 நல்லூர் பிரதேச சபைக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 222 7715 தொலைபேசிக்கு அல்லது லைடன் புடைவை நிலையம் (யாழ். பஸ் நிலையம் முன்பாக) தயவுகூர்ந்து அறியத்தரவும். (53791)

### COMPUTER INSTRUCTOR

பிரபல கணனி நிறுவனமொன்றிற்கு கணனியில் MS-OFFICE, DTP, HARDWARE, CHILDREN PROGRAM போன்ற பாடநெறிகளில் கற்பித்தல் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது சுய விவரக்கோவையுடன், உறுதிப்படுத்தும் பிரதி ஆவணங்கள், நற்சான்றிதழ் பத்திரங்களை அனுப்பிவைக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுதிகதி 25.09.2006 பயிலுநராக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இலக்கம் 2924

(53795) மே/பா உதயன்

## மரண அறிவித்தல்



### செல்லையா தர்மராஜா

*(Proprietor Deelah Communication & Deelah Construction)*

சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.செல்லையா தர்மராஜா 16.09.2006 சனிக்கிழமை இறைவனடி எய்தினார். அன்னார் புஸ்பமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையா நாகம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை - திருமதி அன்னம்மா வேலுப்பிள்ளையின் மருமகனும், பிரகலாதன் (ஆஸ்திரேலியா), மனோராஜ் (கனடா), பிரேம்ராஜ் (A/L கணிதம் கொ/பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), கோகிலா (Belvior International School) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி க. தவநாயகி (சுன்னாகம்), திருமதி பேரின்பநாயகி(கனடா), திருமதி வி.ரதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. வே.நல்லகுருநாதன் (யாழ்ப்பாணம்), திருமதி வி.யோகமலர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.09.2006 புதன்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு இல. 6A, கனல் லேன், வெள்ளவத்தையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இல.18, பெரேரா லேனில் உள்ள பார்க் லாண்ட் தொடர்மாடியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் 11.00 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

T.P. 011-2559966, 0777-727801 · தகவல்: மனைவி பிள்ளைகள்

## நீங்காத நினைவலைகள்

| 12ஆம் மாதம் | | | 18ஆம் மாதம் | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| பிறப்பு<br>05 - 08 - 1927 |  | இறப்பு<br>01 - 10 - 2005 | பிறப்பு<br>01 - 06 - 1976 |  | இறப்பு<br>01 - 04 - 2005 |
| திதி: திரயோதசி<br>**சின்னத்தம்பி இராசரத்தினம்** | | | திதி: ஸப்தமி<br>**இராசரத்தினம் செல்வமாணிக்கராசா (சின்ராஸ்)** | | |

மாதங்கள் கடந்து வருடங்களாகினாலும் எம் மன அலைகள் மாறாதையா என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

நாளை [20.09.2006] புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
புனித அந்தோனியார் லேன்,
சுன்னாகம். (53793)

தயாநிதி (மனைவி),
தாய், திரு.திருமதி மயில்வாகனம் (மாமன் மாமி),
ரவி, விக்கி, காந்தன் (சகோதரர்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரி: தோப்பாக விருத்தியடைந்த தனிமரம்

## அதற்கு வித்திட்ட பீடாதிபதி கமலநாதன் இன்றுடன் ஓய்வு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதற்பீடாதிபதியாகப் பதவியேற்று ஏறக்குறைய ஆறரை வருடங்கள் அப்பதவியில் சிறப்பாகப் பணியாற்றிய கலாநிதி கமலநாதன் அவர்கள் நாளை அறுபதாவது அகவையை அடைகிறார். பதவியிலிருந்து அவர் இன்றுடன் ஓய்வு பெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

நாட்டில் ஆசிரியப் பயிற்சி வழங்கும் நிறுவனங்களில் கல்வியியற் கல்லூரிகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டிற்கு உத்வேகத்தைக் கொடுத்து வினைத்திறன் மிக்க பாடசாலைக் கல்வி முறையைக் கட்டியெழுப்ப முக்கிய பங்காற்றக் கூடியவர்கள் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாவர்.

ஏனெனில், இவர்களுக்கான பயிற்சி முறைகள் அதிகளவில் செயல் முறைசார்ந்தவையாகவும், நவீனத்துவம் மிக்கவையாகவும், ஒழுங்கு கட்டுப்பாட்டிற்குட்பட்டவையாகவும் அமைந்திருக்கும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியியற் கல்லூரிகள் 1985ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் பல பாகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்திலும் கல்வியியற் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலராலும் முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சு யாழ்ப்பாணத்தில் கல்வியியற் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு முதற்படியாக சிறந்த பீடாதிபதி ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை எழுந்தது. ஏனெனில், நியமனம் பெறும் பீடாதிபதி பூச்சிய நிலையிலிருந்து ஆரம்பித்தே சகல செயற்பாடுகளையும் இயங்கு நிலைக்கு கொண்டு வரவேண்டியவராக இருந்தார்.

இப்பதவிக்குப் பொருத்தமானவர் அப்போது வவுனியா கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாக இருந்த கலாநிதி.தி.கமலநாதன் தான் எனக்கருதிய கல்வி அமைச்சு அவருக்கு வெறும் நியமனக்கடிதத்தை மட்டும் வழங்கி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பிக்குமாறு கூறி அவரை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தது.

யாழ்ப்பாணம் வந்த கமலநாதன் அவர்களுக்கு இங்கு கல்வியியற் கல்லூரியை ஆரம்பிப்பதற்குரிய இடமோ, கட்டடங்களோ, தளபாடங்களோ, ஆளணியினரோ இருக்கவில்லை. ஒவ்வொரு வளத்தையும் பெற்றுக் கொள்வதற்காக துவிச்சக்கர வண்டியில் பல இடங்களுக்கும் அலைந்து திரிந்தார்.

அவரது முயற்சியும் கடின உழைப்பும் வீண்போகவில்லை. அவரது உன்னத நோக்கங்களுக்கு உதவுவதற்கு சமூகத்தில் உள்ள பலர் முன்வந்தார்கள். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கட்டடங்கள் சிலவற்றை கலாசாலை அதிபர் தற்காலிகமாகத் தந்துதவினார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுத்துறையினரும், தென்னிந்தியத் திருச்சபையினரும் தளபாடங்களைத் தந்துதவினார்கள். மேலும் யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளிலிருந்து சிறந்த ஆசிரியர்களை விரிவுரையாளர்களாகப் பெற்றுக் கொண்டு அறுபத்தேழு மாணவர்களை முதற் தொகுதியினராகக் கொண்டு 2000 ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.

### உட்கட்டமைப்பு வசதிகள்

கலாநிதி கமலநாதன் அவர்கள் சமூகத்துடன் மிகவும் நெருங்கிச் செயற்பட்டார். வெற்றிகரமான கல்விநிறுவனத் தலைவராக அவர் உயர்ந்து நிற்பதற்கு இதுவே அடிப்படைக் காரணமாக அமைந்தது.

கல்வியியற் கல்லூரியும் சமூகமும் சீரான இடைத் தொடர்புகளைப் பேணுவதானது, இரண்டினதும் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் எனக்கருதிச் செயற்பட்டார். இந்தவகையில் கல்வியியற் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்பலானார்.

அழகான மாளிகைகள் போன்ற கட்டடங்கள் மற்றும் மைதானமும் உருவாக்கப்பட்டதில் அவரது அயராத முயற்சியும் அர்ப்பணிப்பும் அளவிட முடியாதது.

இப்போது உள்ளது போன்று யாழ்.குடாநாட்டிற்கான தரைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டடங்கள் அமைக்கவென உலக வங்கியினால் ஒதுக்கப்பட்டிருந்த 44 கோடி 50 லட்சம் ரூபா நிதி ஒப்பந்தக்காரர்கள் இன்மை மற்றும் மூலப்பொருள் இன்மைகாரணமாகத் திருப்பிச் செல்லக்கூடிய நிலை காணப்பட்டது.

இந்த நேரத்தில் துரிதமாகச் சிந்தித்துச் செயற்பட்டு சமூகத் தலைவர்கள் மற்றும் கல்வியியலாளர்களின் உதவியுடன் உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி முதலில் அரைநிரந்தரக் கட்டடத்தை அமைத்து பின்னர் நிரந்தரக் கட்டடத் தொகுதிகள் உருவாவதில் பெரும் பங்காற்றினார்.

கல்வியியற் கல்லூரிக்கென அழகான பார்வையாளர் மண்டபத்துடன் கூடிய விளையாட்டு மைதானத்தை உருவாக்கியமை ஒரு வரலாற்றுச் சாதனை என்றே கூறவேண்டும்.

மைதானக் காணிக் கொள்வனவுக்கு அரசாங்க நிதி கிடைக்கவில்லை. இதற்கென 26 லட்சம் ரூபா என பெருந்தொகை நிதி தேவைப்பட்டது. இந்த நிலையில் தனக்கு ஏற்படக்கூடிய தனிப்பட்ட இடரையும் பொருட்படுத்தாமல் முகிழ்நிலை ஆசிரியர்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சமூக நலன்விரும்பிகள், பெற்றோர்களின் உதவியுடன் இப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தார்.

### கல்வி வாய்ப்புகள்

தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கும் முயற்சியில் விரைந்து செயற்பட்டார். பயிற்சிக்காக உள்ளெடுக்கப்படும் மாணவர் [illegible] தேவைப்பாடுகளுக்கு [illegible] பல மடங்குகளாக அதிகரித்தார். பாடநெறிகளை அதிகரித்தார்.

இருக்கும் அடிப்படை வசதிகளுக்கு ஏற்ப உள்ளெடுக்கப்படும் மாணவர் எண்ணிக்கையைத் தீர்மானிக்காமல் இயன்றளவு அதிக எண்ணிக்கையான மாணவர்களை உள்வாங்கி பின்னர் அடிப்படை வசதிகளை அதிகரித்தார்.

### வாண்மை விருத்தி

முகிழ்நிலை ஆசிரியர்களினதும் விரிவுரையாளர்களினதும் வாண்மைத்துவ விருத்திக்காக பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

2001ஆம் ஆண்டு தரைத்தொடர்புகள் இல்லாத நிலையிலும் 63 முகிழ்நிலை ஆசிரியர்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் போட்டிகளிலும், நிகழ்வுகளிலும் பங்குபற்றி திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த நேரத்தில்தான் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இலங்கையின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது.

### ஒழுங்கு கட்டுப்பாடு

கல்லூரியில் ஒழுங்கு கட்டுப்பாடு பேணப்படுவதில் கலாநிதி கமலநாதன் அவர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்து செயற்பட்டார். இதனால் இவர் கண்டிப்பானவர் என பெயரெடுத்திருந்தார். ஆனால், ஆசிரியப் பயிற்சி வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஒழுங்கு கட்டுப்பாட்டை பேணுவது அவசியமாகின்றது. ஆனால், எவரையும் பழிவாங்கும் எண்ணத்துடன் அவர் செயற்பட்டதில்லை.

### தூர நோக்கு

கலாநிதி கமலநாதன் அவர்கள் காலத்தின் தேவை அறிந்து முன்கூட்டியே திட்டமிட்டுச் செயற்படக்கூடிய திறமைசாலி. இதனால் கல்லூரிக்கும் சமூகத்திற்கும் பல நன்மை களை ஏற்படுத்தியதுடன் தீமைகளைத் தவிர்த்துக் கொண்டார்.

தற்போது பாடசாலைகளுக்கு ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள் அவசியமாகத் தேவைப்படுகின்றனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இவர் ஆங்கில மொழி மூலப்பாடநெறிகளை ஆரம்பித்திருந்தார். மேலும் போர் அனர்த்தம் மற்றும் ஆழிப்பேரலை போன்ற இயற்கை அழிவுகளினால் பாதிப்புறும் சிறார்களுக்கு வழிப்படுத்தல்களை வழங்கி உதவக்கூடிய விசேட கல்வித்துறையையும் ஆரம்பித்திருந்தார்.

### மாணவர் நலன்

பீடாதிபதி கலாநிதி கமலநாதன் அவர்கள் கல்லூரி சார்ந்த விடயங்களை மாணவர் நலன் என்ற நிலையில் இருந்தே சிந்தித்துச் செயற்படுவார்.

முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு சக்தி மிக்க சுத்தமான உணவு வழங்குவதில் அக்கறையுடன் செயற்பட்டார். மாணவர் உண்ணும் அதே உணவையே தானும் உட்கொண்டார். முகிழ்நிலை ஆசிரியர்களுக்கிடையே சமத்துவம் பேணப்படுவதில் உறுதியுடன் செயற்பட்டார். ஆண், பெண், பிரதேசம், மதம் என்ற பாகுபாடுகள் இல்லாமல் சிந்தனை, சொல், செயல் என்ற கல்லூரியின் மகுடவாசகத்தை அடியொற்றி செயற்படுபவர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பிள்ளைகளாகவே முகிழ்நிலை ஆசிரியர்கள் கருதப்பட்டனர்.

### தமிழர் பாரம்பரியம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தமிழர் பாரம்பரியத்தை பேணும் ஒரு நிறுவனமாக இயங்கவேண்டும் என அக்கறையுடன் செயற்பட்டார். நுண்கலைப் பாடநெறிகளை ஆரம்பித்து அவற்றினூடாக தமிழர் கலைவடிவங்களை முன்னெடுக்க [illegible] விழுமியங்களை கல்லூரியில் பேணுவதன் மூலம்



அதனைச் சமூகத் திற்கு எடுத்துச் செல்ல முடியுமெனக் கருதிச் செயற்பட்டார்.

தற்போது கல் லூரிக்குள் நுழையும்போது தமிழர் பண்பாட்டு நிலையம் ஒன்றுக்குள் நுழையும் உணர்வே ஏற்படுகின்றது. தமிழர் பாரம்பரியத்தைப் பேணும் நினைவுச் சின்னங்களும், கதைசொல்லும் சுவரோவியங்களும் மற்றும் கலை வடிவங்களும் தமிழர் பண்பாடு தொடர்பான சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றன.

பீடாதிபதி கலாநிதி கமலநாதன் அவர்கள் கல்லூரி நலன்கருதி புதுப்புதுத் திட்டங்களை கச்சிதமாக நிறைவேற்றி முடிக்கும் ஆற்றல் படைத்தவர்.

2000ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு வேளையிலும், தற்போது ஏற்பட்ட இக்கட்டான வேளையிலும் மாணவர்களுடன் ஒன்றாகத் தங்கியிருந்து ஒரு தந்தை போல இருந்து உரிய பாதுகாப்பு கொடுத்ததுடன் அவர்களுக்குரிய வசதிகளை மிகுந்த சிரமத்தின் மத்தி யில் ஏற்படுத்திக் கொடுத்தார். கல்லூரி வரலாற்றில் இவை என்றென்றும் மறக்கமுடியாதவை.

கலாநிதி கமலநாதன் அவர்கள் தனி ஓர் ஆளாக இங்கே வந்து சமூகத்தின் உதவியுடன் தனித்துவம் மிக்க பூரணத்துமான ஆசிரியப் பயிற்சி நிறுவனமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை உருவாக்கியிருக்கின்றார்.

தமிழர் பாரம்பரியத்தைப் பேணி சிறந்த ஆற்றல் மற்றும் தேசப்பற்று மிக்க ஆசிரியர்களை உருவாக்கும் மத்திய நிலையமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி திகழவேண்டும் என்பது கலாநிதி திருநாவுக் கரசு கமலநாதன் அவர்களின் பேரவா ஆகும்.

எதிர்காலத்தில் அப்பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வது அவருக்குக் கொடுக்கும் சிறந்த கௌரவமாக அமையும்.

**இராமநாதன் சத்தியேந்திரம்பிள்ளை**
**உப பீடாதிபதி (நிர்வாகம் / நிதி)**

---

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா தர்மராசா

**( உரிமையாளர், டீலா கொமினிக்கேசன், வெள்ளவத்தை)**



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தர்மராஜா 16.09.2006 சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (சிவன்கோயில் தர்மகர்த்தா, எழுதுமட்டுவாள்) - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் புஸ்பமலரின் (நந்தி) அன்புக் கணவரும் பிரகலாதன் (ஆஸ்திரேலியா), மனோராஜ் (கனடா), பிரேம்ராஜ், கோகிலா ஆகியோரின் தந்தையும் தவநாயகி, பேரின்பநாயகி, ரதிமலர் ஆகியோரின் சகோதரரும் சிவலோகநாதன் (இ.மி.ச.அத்தியட்சகர்), சிவலோகநாயகி, நல்லகுருநாதன் (குமார் ரவல்ஸ் நெல்லியடி), யோகமலர், கந்தசாமி, மகாநந்தன் (கனடா), விக்கிரமாசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் கனகாம்பிகை, தியாகராசா, கவிதா, விநாயகமூர்த்தி (முருகன் மில், வரணி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (20.09.2006) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பொரளையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சயன்ஸ் சென்றரடி,*
*நெல்லியடி.* (53794)

தகவல்:
**வே.குமார் (மைத்துனர்)**

### செல்வி முருகன் குபாஜினி



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் குபாஜினி அவர்கள் நேற்று (18.09.2006) திங்கட்கிழமை மரணமடைந்துவிட்டார்.

அன்னார் முருகன்-செல்வராணி தம்பதிகளின் செல்வப் புதல்வியும் விசி, காந்தன், நிர்மலன் ஆகியோரின் சகோதரியும் அமரர் சின்னையா, அன்னம்மா, அமரர் செல்லத்துரை துரோபதை ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.09.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.* (53802)

தகவல்:
**முருகன்**
**(சந்திரன் - கல்யாண புறோக்கர்)**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நெடுந்தீவை வதிவிடமாகவும் கொண்டு, தற்போது திருநெல்வேலியில் வசித்து வந்தவருமான திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை நேற்று (18.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நெடுந்தீவைச் சேர்ந்த சமூக சேவகரும் சங்கரன் மாஸ்ரர் என அழைக்கப்படுபவருமான காலஞ்சென்ற நாகமுத்து சங்கரப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், முன்னாள் தலைவர் - நெடுந்தீவு ப. நோ.கூ.சங்கம்) அவர்களின் பாசமிகு மனைவியும் பாலகுமார் (சுவிஸ்), ஜெயக்குமார் (கனடா), சுரேஷ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ஈவோன் (சுவிஸ்), கார்த்திகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தனலட்சுமி, விஜயலட்சுமி, சுப்பிரமணியம், இராசதுரை, ஜீவரட்ணம், மகேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள அவரது சகோதரர் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடிலேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*

தகவல்:
**செ.இராசதுரை (சகோதரன்)**

### சண்முகநாதன் சுரேஷ்குமார்

கோண்டாவில், கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் சுரேஷ்குமார் நேற்று முன்தினம் 17.09.2006 காலமானார்.

அன்னார் சண்முகநாதன் - திலகவதி தம்பதியரின் மகனும் சுகன்ஜாவின் அன்புக் கணவரும், அபிநயா, அபிநயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திலீப்குமார், சண்முகதேவி, சிவகுமார், சண்முகராஜ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அளவெட்டியைச் சேர்ந்த சர்வானந்தன் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் தர்மேந்திரன், நிதாகரன், சுதாகரன், சிவப்பிரிந்தா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமை மீறல் மோசமாக அதிகரிப்பு கண்காணிக்குமாறு ஐ.நா. ஆணையர் அவசர கோரிக்கை



ஜெனிவா, செப்.19

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமாக அதிகரித்துள்ளன என்று தெரிவித்திருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இவற்றை சர்வதேச சமூகம் கண்காணிக்க வேண்டும் என்று அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகிய ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அதன் தலைவர் லூயிஸ் அபோர் அம்மையார் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் பெரிய அளவில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் அதேவேளை, அரசுப் படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் சட்டம், ஒழுங்கு கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கு அரசு தவறியிருப்பது மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது - என்றும் லூயிஸ் அபோர் அம்மையார் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலைமையை சர்வதேச சமூகம் கண்காணிக்க வேண்டியது அவசர தேவையாகியுள்ளது. இலங்கையில் இடம்பெறும் உரிமை மீறல்கள் வெறும் போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் அல்ல. அவை சர்வதேச சட்டங்களையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் பெரிய அளவில் மீறுகின்ற செயல்கள். இது விடயத்தில் சர்வதேச சமூகம் விரைந்து தனது கவனத்தைச் செலுத்தவேண்டியது அவசியம் - என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

மூதூரில் நிவாரணப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட குற்றச் செயல்களை விசாரிக்க அரசு கொண்டுள்ள அக்கறையை வரவேற்பதாகக் கூறிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான விசாரணைகள் முடிவுகளை மட்டுமன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் பரிகாரத்தையும்கூட வழங்கத் தவறியுள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் சென்றடைவதை இரண்டு தரப்புகளுமே (அரசு-புலிகள்) தடை செய்திருப்பதாகவும் அவர் தனது உரையில் குற்றஞ்சாட்டினார். (ஐ-12)

## மாணவர்கள் தமது கல்வியைத் தொடரக் கூடிய இயல்பான நிலை தோற்றுவிக்க வேண்டும்

### மாணவர் ஒன்றியம் வற்புறுத்து

யாழ்ப்பாணம், செப்.19

அரசதரப்பும், படைத்தரப்பும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடரக் கூடிய இயல்பான நிலையினை ஏற்படுத்த வேண்டும். ஏ-9 வீதியைத் திறந்து, ஊரடங்கு முற்றாகத் தளர்த்தப்பட்டு, மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதுவரைக்கும் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கற்றலிற்கான சூழலினை ஏற்படுத்தக் கோரி குடாநாட்டில் கல்விச் சமூகத்தினர் பகிஸ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வேளையில் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படைகளும் ஒட்டுக் குழுக்களும் இணைந்து மாணவர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அதிகரித்து உள்ளனர்.

வடக்கு-கிழக்கில் மட்டுமல்லாது தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற இடங்கள் எங்கும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

ஊரடங்கு வேளைகளில் வெள்ளை வான்களில் வருவோர் அப்பாவி மக்களை வகைதொகையின்றி கடத்துகின்றனர். பின் குரூரமாகக் கொல்லப்பட்டு, தெருவெங்கும் வீசப்படுகின்றனர்.

இந்நிலையில் பாடசாலைக்குச் செல்லுகின்ற மாணவர்கள் கடத்தப்படுவதும் சுடப்படுவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. மாணவர்கள், ஆசிரியர்கள் மீதான வன்முறைகளும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் மீதான அடக்கு முறைகள் தொடருகின்றன. இந்த நொடி வரை ஒவ்வொரு மாணவனும் தனது உயிரினைக் கையில் பிடித்தபடியே உள்ளான்.

சிறுவர்கள் அரச பயங்கரவாதிகளால் கடத்தப்படுவதை, கொல்லப்படுவதைக் கண்டித்து தடுத்து நிறுத்த உடனடியாக அனைத்துத் தரப்பும் முன்வரவேண்டும். - என்றுள்ளது.

## வண்ணார்பண்ணைக்கு புதிய கிராம அலுவலர்

யாழ்ப்பாணம், செப்.19

ஜே/82 வண்ணார்பண்ணை பகுதி கிராம அலுவலர் பொ.தர்மபாலன் தமது 28 வருட கால சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இதனையடுத்து, வண்ணார் பண்ணை கிராம அலுவராக நா.சபாரட்ணம் பதவியேற்றுள்ளார்.

## அரசு-புலிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

''அம்பாறை, யால தேசிய பூங்கா அருகே 11 முஸ்லிம் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

இப்படுகொலைச் சம்பவம் நடந்த இடம் அருகே ஸ்ரீலங்கா இராணுவ முகாம் அமைந்துள்ளது. இந்த இடம் ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இத்தகைய படுகொலைகளை நிகழ்த்தும்போது தமிழீழ விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டுவதை நீண்ட காலமாக ஸ்ரீலங்கா இராணுவம் வழக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கு நல்ல உதாரணமாக மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக் காட்டலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டி ஸ்ரீலங்கா இராணுவம் வெளியிடும் செய்திகள் குறித்து சர்வதேச ஊடகங்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 நிவாரணப் பணியாளர்களின் குடும்பங்களைச் சர்வதேச ஊடகங்கள் சந்தித்தமையால் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. அத்தகைய ஒரு நடைமுறையை ஊடகங்கள் இலங்கையில் கடைப்பிடிக்க வேண்டும்'' - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஜெயா, விசேட அதிரடிப் படையினரே இக்கொடூரத்தின் பின்னணியில் இருந்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டினார்.

தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையே பதற்றத்தை ஏற்படுத்த இக்கொடூரம் புரியப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். (உ)

## லிபர் நூல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சிக்கல் காரணமாக கப்பல் நேற்றுப் புறப்படவில்லை என்றும் -

இக்கப்பல் இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் என்றும் - நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (1-151-203)

## ஊர்மக்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிரடிப் படையினரின் முகாம்கள் சூழவுள்ள இப்பிரதேசத்தில், பலவீனமடைந்துள்ள விடுதலைப் புலிகள் வந்து இவ்வாறான ஓர் அகோர செயலைப்புரிவது அசாத்தியமானது என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

இந்தப் பின்னணியிலேயே அவர்களுடைய பார்வை இலங்கைப் பாதுகாப்புப் படையினர் யாரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா? என்ற கோணத்தில் செல்கிறது. அண்மைக்காலமாகப் பாதுகாப்புப் படையினருக்கு - குறிப்பாக அதிரடிப் படையினருக்கும், ஊர் மக்களுக்குமிடையே பலவிதமான முரண்பாடுகள் தோற்றம் பெற்றிருந்தன.

அந்தப் பின்னணியில் நேற்று (ஞாயிறு) மையவாடிப் பிரச்சினை ஒன்று சம்பந்தமாக எழுந்த ஒரு தகராற்றிலும் விசேட அதிரடிப் படை முகாம் ஒன்றின் பொறுப்பதிகாரி முஸ்லிம் மக்களுடன் படுமோசமாக நடந்து கொண்டார் என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

கண்கண்ட சாட்சியங்கள் எதுவும் இல்லை என்ற காரணத்தினால், இப்போதைக்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்ற, படுகாயமடைந்த நபர் ஒருவர் மாத்திரமே சரியான விவரங்களைத் தரலாம் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

துரதிஷ்டவசமாக சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸார், சம்பவம் நடந்த இடத்தில் இருந்து அந்த உடல்களை அகற்றுவதற்கு முன்பு - அங்கு நீதிவான் சென்று விசாரணைகளை நடத்தி அதற்கான மேலதிக குற்றவியல் விசாரணைக்கான சான்றுகளை எல்லாம் திரட்டுகின்ற ஒரு வேலையைச் செய்யாமல் அவசரஅவசரமாக - மக்கள் அவசரப்பட்டார்கள் என்பதற்காக - சடலங்களை அகற்ற பொலிஸார் அனுமதித்துள்ளனர். ஓர் ஒழுங்கான விசாரணையை நடத்தி இதிலே சரியான சாட்சியங்களையும், தடயங்களையும் திரட்டி எடுக்கின்ற விடயத்தில் ஒரு பெரிய தவறை அப்பிரதேசத்துப் பொலிஸார் இளைத்திருக்கின்றார்கள் என்பதும் கவனிக்கவேண்டியது.

மக்களைப் பொறுத்தமட்டிலே அதிக பெரும்பான்மையானோர் அண்மைக்காலமாக அந்தப் பிரதேசத்திலே நிலைகொண்டிருக்கின்ற விசேட அதிரடிப்படையினரின் ஒரு முகாமுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி மீது மிகவும் சந்தேகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பது அங்கு நாங்கள் அப்பட்டமாகக் கண்ட உண்மை.

ஆனால், இது விடயத்தில் சரியான ஒரு விசாரணை நடத்தப்படவேண்டும் என்று நாங்கள் வேண்டுகிறோம். அதுமட்டுமல்ல, தற்காலிகமாகவாவது குறித்த பிரதேசத்திலே மக்களோடு படுமோசமாக நடந்துவருகின்ற இந்த விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி ஒருவரை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும். அவர் நீதி, நியாயமான விசாரணைகளுக்குத் தடங்கலாக இருப்பார் என்று மக்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். இதனை நாங்கள் பொலிஸ்மா அதிபர், உதவிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் விசேட அதிரடிப்படைப் பொறுப்பதிகாரி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்தோம். அவர்களும் எங்களுடன் வந்திருந்தனர். ஆனால், எடுத்த எடுப்பிலேயே சான்றுகள் இல்லாமல் ஒருவரை இடமாற்றம் செய்வது தொடர்பாக எந்த உத்தரவாதத்தையும் தரமுடியாது என்று பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

ஆயினும், முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தமட்டிலே, மூதூரிலே அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களின் படுகொலையின் பின்னணியிலே ஐக்கிய நாடுகள் சபையின் விசேட விசாரணை ஒன்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதேபோன்று இந்தப் படுகொலைகளும், ஐ.நா.சபையின் விசேட விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு ஹக்கீம் தெரிவித்தார். (ஐ-12)

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இதற்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

அம்பாறை தவிர்ந்த ஏனைய தமிழ் மாவட்டங்களில் இன்றையதினம் பொத்துவில் படுகொலையைக் கண்டிக்கும் வகையில் கறுப்புக் கொடிகளைக் கட்டித் தொங்கவிடுமாறும் - துக்கம் அனுஷ்டிக்குமாறும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## விசேட அதிரடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் இந்தப் பகுதிக்குள் நுழைய முடியாது என்று கூறும் அளவுக்கு அந்தப் பிரதேசம் விசேட அதிரடிப்படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கொலையுண்டவர்களின் சடலங்கள் நேற்று முற்பகல் பொத்துவில் பெரிய பள்ளிவாசலுக்கு கொண்டுவரப்பட்டபோது அங்கு பெரும் பதற்ற நிலை உருவாகியது. பொத்துவில் மற்றும் அண்டிய பிரதேசங்களில் பாடசாலைகள், அலுவலகங்கள், கடைகள் மூடப்பட்டன. முஸ்லிம் மக்கள் ஆ திரமடைந்து காணப்பட்டனர்.

நிலைமை கட்டு மீறிச் செல்லக் கூடிய ஆபத்து அறிகுறி தென்பட்டதையடுத்து கொழும்பில் இருந்து பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று பொத்துவிலுக்கு விரைந்தது. பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் அங்கு விரைந்து சென்று முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளோடும் மதத் தலைவர்களோடும் உரையாடினர்.

படுகொலையுண்டவர்களின் மரண விசாரணைகளை அக்கரைப் பற்று மஜிஸ்திரேட் நீதிவான் நடத்தினார். அவரது உத்தரவின் பேரில் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

சடலங்களில் ஐந்துக்கு மேற்பட்ட வெட்டுக் காயங்கள்வரை காணப்பட்டன என்று நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

வாள், கத்தி, போன்ற கூரான ஆயுதங்களால் வெட்டப்பட்ட காயங்களும், கோடரியினால் கொத்தியது போன்ற ஆழமான பிளவுகளும் சடலங்களில் காணப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

சடலங்கள் கிடந்த பகுதியில் தரையில் சப்பாத்துக் கால் அடையாளங்களும், சிகரெட் துண்டுகள், மதுபானப் போத்தல்கள் என்பனவும் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-12)

## பொத்துவில் காட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலும் கிடந்தன.

யால வனவிலங்கு சரணாலயத்திற்கு அண்மையில் - விசேட அதிரடிப்படையின் பயிற்சி முகாமுக்குச் சமீபமாகவே - இந்தப் படுகொலைகள் நிகழ்ந்துள்ளன.

கொலையுண்டவர்கள் அனைவருமே சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட பதினொரு சடலங்களும் நேற்றுப் பகல் பொத்துவில் ஜும்மா பள்ளிவாசலில் வைக்கப்பட்டிருந்தன.

கொலையுண்ட தொழிலாளர்கள் பெயர் விவரம் வருமாறு:-

அப்துல் ரகுமான் முஹமட் சம்சுதீன். அப்துல் கபூர் அனிஸ். ஜாவுவத் அனீஸ் முஹம்மது பாருக் அப்துல் ரசித். முஹம்மது ஜவ்வர். நஷார் அன்வர். அப்துல் ரஹீம் இஸ்மைஸ். அப்துல் மஜீத் வைறுட். நோஹுட் லெப்பை அஷ்ரப். பரீட் பைஷால்.

இவர்கள் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

படுகாயங்களுடன் குற்றுயிராக மீட்கப்பட்டவர் மீரா மைடீன் என அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

இந்தப் படுகொலைச் செய்தி வெளியானதை அடுத்து அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், கல்முனை போன்ற பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டது. கூடுதலான பொலிஸார் வீதிகளின் காவல் கடமையில் ஈடுபட்டனர். (ஐ)

## கொடூரக் கொலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் முஸ்லிம்களின் இருப்பு, பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் அதற்கான ஆரம்பமா? என்கின்ற சந்தேகத்தையும் உருவாக்கியிருக்கின்றது.

அண்மையில் மூதூர் பிரதேச முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட வடுக்கள் ஆறுவதற்கு முன்பதாக மீண்டும் பொத்துவில் - இரத்தல் குளம் பகுதியில் குளக் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த பொத்துவில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டுள்ள இந்தக் கொலை வெறிச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டோர், எந்தத் தரப்பினராக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இச்சம்பவம் பற்றி பூரண விசாரணை ஒன்று நடத்தப்பட்டு இதில் சம்பந்தப்பட்டோர் மக்கள் முன் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்.

இச்சம்பவத்தின் எதிரொலியாக பொத்துவில் முஸ்லிம்கள் மத்தியில் மாத்திரமின்றி, கிழக்கு மாகாணத்தின் பல்வேறு முஸ்லிம் கிராமங்களில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வை நீக்கி அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டிய கடமைப்பாடு அரசுக்கு இருக்கின்றது.

இவ்விடயத்தில் அசமந்தப் போக்கைக் கடைப்படிக்காது உடனடியாக செயலில் இறங்கிக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசு முன்வர வேண்டும். (க)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org